**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண்.163/2018**

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெகதீஸ்வரன் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 19.09.2022.

**D.W. : 1**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் அப்பா பெயர் எம்.எஸ்.கணேசன். என் அம்மா பெயர் சரஸ்வதி. என் பெற்றோருக்கு 3 ஆண் பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். வாதி, 4, 5 பிரதிவாதிகள் எனது சகோதரிகள். நான் 2,3 பிரதிவாதிகள் பிள்ளைகள். என் தகப்பனார் கணேசன் எண்டர்பிரைசர்ஸ் என்ற நிறுவனத்தை பாலக்கடையில் நடத்தி வந்தார். கணேஸ் எலக்ட்ரானிக்ஸ் சிங்காரத் தோப்பில் நடத்தி வந்தார். இதுதவிர விவசாய நிலங்கள் வாங்கி விவசாயம் செய்து வந்தார். நான் பியுசி படித்துள்ளேன். என் தம்பி ஆறுமுகம், ஐயப்பசாமி எஸ்எஸ்எல்சி படித்துள்ளனர். என் அப்பா உயிருடன் இருக்கும் காலத்தில் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. 2,3 பிரதிவாதிகளும் எந்த தொழிலும் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனார்

அவருடைய சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்து தவிர வேறு எந்த சொத்தையும் எனது தகப்பனார் வாங்கவில்லை. 11.03.2014 அன்று என் அப்பா இறந்துவிட்டார். என் அம்மா 17.04.1997 ல் இறந்துவிட்டார். வாதி பிரதிவாதிகளை தவிர வேறு யாரும் என்னுடைய அப்பாவிற்கு வாரிசுகள். என் அப்பாவிற்கு 3 பெண் பிள்ளைகளின் மீது பாசம் அதிகம் என்றால் சரிதான். அதேபோல் 3 ஆண் பிள்ளைகளின் மீது பாசமாகத்தான் இருந்தார். 2002 ல் என் அப்பா ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அந்த உயில் ஆவணம் வா.சா.ஆ.1 ஆகும். தாவாவில் கண்டுள்ள இ செடியூல் சொத்தில் ஈரோட்டில் உள்ள ஒரு வீட்டை தனது மகள்களா வாதி மற்றும் 4,5 பிரதிவாதிகளுக்கு கூட்டாக எழுதி வைத்தார். மேற்படி உயிலில் எனக்கு அதிகமாக சொத்தும் 2,3 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டது. மேற்படி உயிலில் பெண்களை விட பையன்களான எங்கள் 3 பேருக்கும் அதிகமாக எழுதிக்கொடுத்துள்ளார். அந்த உயிலில் எனக்கு அதிகமாக கொடுத்துள்ளார்கள். அந்த உயிலில் 2,3 பிரதிவாதிகளுக்கு அவருடைய பேச்சை கேட்காமல் செலவு செய்து வந்தார்கள் அந்த தகவலையும் உயிலில் கூறியுள்ளார் என்றால் சரிதான். நான் தான் வீட்டின் மூத்த மகன். அவர் காலத்திலேயே பேரன் பேத்திகளுக்கு சேர வேண்டியதை செய்து விட்டார். 17.06.2004 ல் என் அப்பா இன்னொரு உயிலை எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் பையன்களுக்கு கொடுத்த சொத்தில் தான் மாறுதல் செய்திருக்கிறார் பெண்கள் 3 பேருக்கும் எந்த மாற்றமும் செய்யாமல் தாவா சொத்தில் இ அயிட்ட சொத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருக்கும் காலத்தில் மண்ணச்சநல்லுர் பழுர் கிராமத்தில்

எனது தாயார் சரஸ்வதி பெயரில் என் பெயரிலும் எனது சகோதரர் ஆறுமுகம் பெயரிலும் கூட்டாக 6 ஏக்கர் நிலத்தை வாங்கினார் என்று சொன்னால் சரிதான். என் அம்மா காலமான பிறகு மேற்படி 6 ஏக்கர் நிலத்தை பொறுத்து விற்பனை செய்வதற்காக வாதி மற்றும் பிரதிவாதிகள் 4, 5 அவர்களிடம் இருந்து எனது தகப்பனார் ஒரு பொது அதிகார ஆவணத்தை எழுதி வாங்கினார் என்றால் சரிதான். 11 வீடு, 3 கடைகளை அந்த பழுவூரில் உள்ள 6 ஏக்கர் நிலத்தை விற்று அந்த கிரைய தொகையில் இருந்து ஸ்ரீ கணேஸ் சரஸ்வதி அம்மாள் என்ற பெயரில் சொத்துக்களை என் பெயரிலும் எனது மனைவி பெயரிலும் எனது சகோதரர் ஆறுமுகம் மற்றும் அவரது மனைவி பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். என் சகோதரர் 3ம் பிரதிவாதி ஐயப்பன் ஹோலி வெஸ்ட் என்ற பெயரில் உள்ள 2 அடுக்கு மாடி குடியிருப்புக்களை கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த பழுவூர் சொத்துக்களை விற்று என் சகோதரிகள் பெயரில் எந்த சொத்தை கிரையம் வாங்கவில்லை. அந்த பழுவூர் சொத்தை விற்று 11 வீடு, 3 கடைகளை மற்றும் 2 அடுக்கு மாடி குடியிருப்புக்களை வாங்குவதற்கே சரியாகிவிட்டது என்று சொன்னால் சரிதான். 06.04.2011 ல் என் அப்பா கிரையம் வாங்கப்பட்ட வீடு. அது தாவாவின் கெச் செடியூல் சொத்தாகும். வாதியின் மகள் பெயர் கற்பகம் மற்றும் காயத்ரி ஆகும். காயத்ரி 2010 ல் திருமணம் நடைபெற்றது. கற்பகத்திற்கு சுமார் 4 அல்லது 5 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. கற்பகத்திற்கு திருமணம் செலவுக்காக சாந்தி ஈரோடு உள்ள சொத்தை விற்பதற்காக 2004 ல் தன் தகப்பனார் எழுதிக் கொடுத்த உயிலைக் கேட்டாரா என்றால் இல்லை.

இந்த வழக்கின் வாதி சம்மதித்தால் ஈரோட்டில் உள்ள சொத்திற்கு பதிலாக அண்ணாமலை நகரில் உள்ள ஒரு வீட்டினை 3 சகோதரிகளுக்கு எழுதிக் கொடுக்கிறோம்.